# வீணை தனம்மாள்

ஸ்ரீமதி. கனகம்மாள்

இன்னிசைக்கு ஓர் உருவம்: அதாவது பாட்டிற்கும் சப்தத்திற்குமுரியதோர் உருவத்தை வரைந்து கொடுக்கக்கூடிய கருவி ஒன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அந்தக் கருவியைக் கொண்டுவந்து நான்கு வருடங்களுக்கு முன் சென்னை ராம கிருஷ்ணன் தெருவு. 28-வது நம்பர் வீட்டு மாடியில் உள்ள குறுகிய இருட்டு அறையில் வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் வைத்திருந்தால், அங்கு எழுந்த இசைப் பெருக்கிலிருந்து, அந்தக் கருவியானது வீணை செப்பும் ஒலியிலிருப்பவளின் உருவத்தைத்தான் வரைந்திருக்கும் என்பது நிச்சயம். அந்த நாதத்தின் மூர்த்தி கலைவாணியானாலும், அந்த இசையைச் சிருஷ்டித்தவர் யார்?

கறுத்த மேனி, பரந்த முகம், அகண்ட கண்கள், எந்நேரமும் புகையிலை உபாசனையினால் காவி ஏறிய பற்கள் - இவற்றையுடைய சாதாரண ஒரு ஸ்திரீதான். இவருடைய மெல்லிய சுருங்கிய விரல்களிலிருந்துதான் பரவசப்படுத்தக் கூடிய இசை கிளம்புகிறது. இவர்தான் வீணை தனம்மாள்.

சுண்டு விரல் என்பதை நம் அவயவங்களில் மிக அலட்சியமாகச் சொல்வது வழக்கம். ஆனால், தனம்மாள் சுண்டு விரல் வீணையில் பக்க சாரணியை மீட்டிச் சுருதியைக் கூட்டினால், நம்மை அது நாத வலையில் பிணைத்துவிடும். எங்கும் ஒரே நிசப்தம் நிலவும். அழுத பிள்ளை வாய்



மூடும் என்பது பொய்யாகாது. தனம்மாள் வீட்டில் குழந்தைகள் அழாது - அழக்கூடாது! பெரியவர்கள் மூச்சு விடவுங்கூடாது. அவர் வாசிக்கும்பொழுது, நம்மையறியாமல் நாம் பிராணாயாமம் செய்வோம். பெர்ஸனாலிடி என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள்: கண்யமும், கம்பீரமும் நிரம்பிய இவருடைய முகத்திலிருந்து அது ஒளிவிடும்; பார்த்தவுடன் மரியாதையும் மதிப்பும் உண்டாகும்.

இவருக்கு இயற்கையழகைத் தவிர, செயற்கை அழகு கிடையாது. காதிலோ, மூக்கிலோ, கழுத்திலோ எவ்விதமான ஆபரணமும் அணியமாட்டார். கை நிறையக் கருவளையல்களும், கழுத்தில் கருமணிப் பொட்டுமே இவருடைய அணிகள். சாதாரணமாகப் பிரகாசமான வர்ணமுடைய புடவையைத்தான் கட்டுவார். பாரதியார் சொல்லும் 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச்செருக்கு' இவருக்கே உரியது. ஆடம்பரத்தையும் படாடோபத்தையும் சிறிதும் விரும்ப மாட்டார். உண்மையானவர்களைப் பாராட்டும் இயல்பும், போலிகளை எதிரிலேயே துச்சமாய்த் தூக்கி எறிந்து விடுவதும் இவருடைய குணங்கள். சங்கீதத் துறையிலும் சரி, லௌகிகத் துறையிலும் சரி, உண்மையன்புடையவர்களை மனப்பூர்வமாய்க் கொண்டாடுவார். சின்ன விஷயம்—பாக்குத் தூள். வெகு நேர்த்தியாக வாசனை கலக்கப்பட்டிருந்தால், ஆகா! என்ன அழகு என்று அதை மெச்சுவார். புகையிலையிலும், உயர்ந்த ரகத்தையே உபயோகிப்பார். எதையும் ஆழ்ந்து பார்த்துத்தான் நிச்சயிப்பாரே தவிர, ஒரு மரியாதைக்குக்கூட முகத்திற்கு நேராகத் தாட்சண்யம் காட்டமாட்டார். அதிகப் பிரசங்கிகளைப் பலர் முன்னிலையில் அவமானப்படுத்தவும் தயங்க மாட்டார். ஆகையால், வீட்டிலுள்ளும், வெளி உலகத்தி

னும், இவரைக் கண்டால் பிறருக்குப் பயமும், மரியாதையும் அதிகம்.

1908-ஆம் வருஷத்தில்தான் நான் முதன் முதலாக இவரைச் சந்திக்க நேர்ந்தது. ஒருநாள், முன் பின் அறிவியாமல் திடீரென்று நாங்கள் தனம்மாள் வீட்டிற்குப் போனோம். அன்று அவர் வீட்டில் ஏதோ விசேஷம். வருவோரும் போவோருமாக இருந்தார்கள். நாங்கள் வந்திருக்கிறோம் என்று அறிந்து, அந்த அலுவல்களினிடையிலும், எங்களுக்கு இரண்டு மூன்று உருப்படிகள் வாசித்தும் பாடியும் காண்பித்தார். அன்று அவர் தோடி ராகத்தில் பாடிய "நினுவினா சுகமுகான" என்ற ஐயர்வாள் கீர்த்தனமும், கல்யாணியில் பாடிய "நினுவினா கதிகான" என்ற சுப்பராய சாஸ்திரியார் கீர்த்தனமும் இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றன.

வீணை வாசிப்பதில் ஒரு தனிப்பட்ட வழியை நிலை நிறுத்தியவர் தனம்மாள். அவர் வீணையில் வாசித்துப் பாடும்பொழுது அந்த வீணை, சங்கீதத்துடன் பாஷையையும் அப்படியே பேசும். அவர் மீட்டுவதிலுள்ள பெருஞ் சிறப்புச் சொல்லவே முடியாது. தனம்மாள் மீட்டு, நாதத்தை மலரச்செய்து, கம்பீரமாகவும் இனிமையாகவும் வெளிவிடும். ஆனால் இன்று, அப்படிப்பட்ட மீட்டின் நுட்பமே ஒருவருக்கும் புலப்படவில்லை. யாராவது கடினமாக மீட்டி வாசித்தால், 'பாவம்! வீணை அழும்!' என்பார். அவர் சாரீரம் வீணையோடு மிகவும் அன்யோன்யமாக இழையும்.

'ஸரி கம பத நிரதாம்—விஷ்ணு ஸங்க்ராந்த ஹஸ்தாம் தாம்' என்று ஒருதரம் பாடிவிட்டு வீணையில் மறுபடி அந்த அடியை எடுத்தால் வீணை அவ்வார்த்தைகளை அப்படியே சொல்லும். கேட்போருக்கு, சாரீரமா? வீணையா? என்ற மயக்கம் உண்டாகும்.



ராத்திரி ராமாயணம் கேட்டும் அப்பாலே,
ராமனுக்குச் சீதை முறை என்ன என்பது போலே.

என்று அவர் பாடும்பொழுது உண்டான சுவை, பாவம், உணர்ச்சி எல்லாம் அபிநயத்தைப் பார்க்கும்போது உண்டாவதற்கு மேலேயே இருக்கும்.

வீட்டிற்கு வருபவர்களை மரியாதையுடன் வரவழைத்து உபசரிப்பதில் இவர் நிபுணர். கண் பார்வையை இழந்து இவர் 20 வருஷ காலம் இருந்தார். அப்பொழுதும், காலடிச் சத்தம் கேட்டவுடனே, "வாருங்கோ! அம்மாவா? வாங்கோ! யாருடா? சிவராமா! அம்மாவுக்குப் பாய் போடு" என்றும் அன்பு ததும்ப அழைப்பார். அவருடைய சௌலப்பிய குணத்தைப் போற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. யார் எப்பொழுது அவர் வாசிப்பைக் கேட்க வேண்டுமென்று போனாலும், அவர்கள் கேட்டு ஆனந்திக்காமல் திரும்பியதே கிடையாது. ஒரு சமயம் இரவு பத்து மணி. வடதேசத்து மகாராணி ஒருவர் தனம்மாளின் சங்கீதம் கேட்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டார். காலம் அகாலம். இவரோ, தள்ளாத கிழவி. இதை உத்தேசித்து, தயக்கத்துடன் நான் போய், "கொஞ்சம் வாசிக்கலாமோ?" என்றவுடன், "ஆகா! அதற்கென்ன!" என்று என்னுடன் புறப்பட்டுவிட்டார். 3 மணி நேரம் வாசித்தார். அன்றுவரை நாங்கள் கேட்டில்லாதபடி அற்புதமாகவும், வடதேசத்து ராகங்களான பெஹாக், யமன் முதலியவைகளையும், இந்துஸ்தானி, மராட்டிப் பாடல்களையும் அமிர்த வர்ஷம்போல் பொழிந்துவிட்டார். "முப்பது வருடங்களாக உங்களிடம் கேட்டும், இதுபோலக் கேட்டதில்லையே!" என்று வியந்தோம். புதிது புதிதாக இசை நுட்பங்கள் எங்குதான் வைத்திருப்பாரோ?

அவர் ஆயுள் முழுதும், அந்திய காலத்தில்கூடச் சிரமம், தள்ளாமை ஒன்றும் பாராட்டாமல், ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், எங்கிருந்தாலும், தவறாமல் இரண்டு மூன்று மணி நேரம் வீணுகானம் செய்துவந்தார். அவர் ஆற்றலுக்கும் சௌலப்பியத்திற்கும் இதைவிட எடுத்துக்காட்டு வேண்டுமா?

அலுப்பில்லாமல் இவருடைய சங்கீதத்தை எப்படிக் கேட்க முடியுமோ, அப்படியே இவருடன் பேசிக் கொண்டிருக்கவும் முடியும். எப்போதும் நகைச்சுவையுடன் பேசுவார். பார்வை இழந்துவிட்ட காலத்திலும், உலக விஷயங்களின் நுட்பமான அறிவை எப்படியோ சம்பாதித்துக் கொள்வார். அடுத்த வீட்டுக்கார அம்மா, "சக்கு! சக்கு!" என்று தன் மகளை உரத்த குரலில் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். தனம்மாள் பாடத்தொடங்கும் சமயம். அப்போது அவர் சாவதானமாக, "சக்கு பண்டரிபுரம் போயிருப்பா; ஏன் கத்தறுங்க?" என்றதும், உட்கார்ந்திருந்த எல்லோரும் கொல்லென்று சிரித்தோம்.

தம் ஹாஸ்யத்தைக் கொனஷ்டையாகச் செய்வார். சங்கீத வித்வத் சபையில் ராக லட்சணங்களைப் பற்றிய சர்ச்சை பலமாக நடந்துகொண்டிருந்த சமயம், ஒருநாள் அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். "அம்மா அவர்கள் வித்வத் சபைக்குப் போவதுண்டோ?" என்று கேட்டார். "ஏன்? போயிருந்தேன்." "ஒன்றுமில்லை; அங்கே சங்கீதம் பேசுகிறார்களாமே என்றுதான் கேட்டேன்!" என்றார். ஒரே சிரிப்பு. இந்தத் துணுக்கை இன்றும் நினைத்து நினைத்து ஆனந்திப்பதுண்டு. இவரிடத்திலே ஹாஸ்யம் குறும்பாகவும் உருவமெடுக்கும்.

பல வருஷங்களுக்கு முன், தனம்மாள் வீட்டினருகில் ஒரு நாயனக்காரன் இருந்தான். பட்டணத்துத் தெருக்கள்தான்



தெரியுமே! 8 அடி அகலமும், இரட்டை வரிசை வீடுகளும். இவன் கற்றுக்குட்டி. வெகு சாஸ்திரோக்தமாக அதிகாலையில் எழுந்து சாதகம் செய்வான். மேள சாதகத்தைச் சகிக்கச் சங்கீதமே தெரிய வேண்டாம். இதுவோ, காதில் பஞ்சடைத்துக் கொண்டாலும் துளைக்கும் அபஸ்வரம். ஒருநாள் அதிகாலையில் தன் குழந்தையிடம் தனம்மாள் ஓர் அரையணாவைக் கொடுத்து அவனிடம் கொடுக்கும்படி அனுப்பினார். அவனுக்கு எதற்கென்றே புரியவில்லையாதலால், சாதகத்தைத் தொடங்கி விட்டான். அரைமணி நேரம் கழிந்தபின், அதே குழந்தையிடம் மறுபடியும் ஓர் அணாவைக் கொடுத்தனுப்பினார். நாயனக்காரன் ஒன்றும் புரியாதவனாய்த் திகைத்தான்; பின், சட்டென்று தன் சாதகத்தை நிறுத்திவிட்டு, தனம்மாளிடம் வந்து, "எதற்காக முதலில் அரையணாவும் பிறகு ஓரணாவும் கொடுத்தனுப்பினீர்கள்? ஏதாவது வெற்றிலை, பாக்கு வாங்கிவர வேண்டுமா?" என்று கேட்டான். பாவம்! இங்கே ஒரே சிரிப்புத்தான். எல்லோரும் விழுந்துவிழுந்து சிரித்தார்கள். 'அரைப்பணம் கொடுத்து ஆரம்பிக்கச் சொன்னாளாம்; ஒரு பணம் கொடுத்து ஓயச்சொன்னாளாம்' என்பது அவனுக்கு என்ன தெரியும்? அன்று முதல் நாயனக்காரன் சாதகத்திற்குச் சமுத்திரக்கரை போய்விட்டான்.

இவருடைய சங்கீதத்தைக் கேட்டு அனுபவித்தவர்கள் ரசிகர்கள் மாத்திரமல்ல. சங்கீத உலகில் மிகப் பெரியவர்களான வேணுகான சரப சாஸ்திரியார், திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர், கிருஷ்ண பாகவதர், மகாவைத்திய நாதையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், வீணை சேஷண்ணா, தர்மபுரி சுப்பராய அய்யர், அப்துல் கரீம்கான் போன்ற பலரும் இவருடைய அளவற்ற ஞானத்தையும்,

இசைப் புலமையின் நுட்பத்தையும் அனுபவித்துக் கொண்டாடியிருக்கிறார்கள். ஒருசமயம், வீணைசேஷண்ணா, "சங்கீதத்தின் சுகபாவம் முழுதும் உங்களிடமே அடைக்கலம்" என்று புகழ்ந்தார். பெண்களிடம் சங்கீதம் கேட்பதில்லை என்றிருந்த சரப சாஸ்திரியார், இவர் வீணை கானத்தைக் கேட்டு மெய்மறந்து போனார். சரப சாஸ்திரியாரின் வாசிப்பை நினைத்து, "ஆகா! என்ன வேணு நாதம்! என்ன வித்வத்!" என்று உருகிக் கண்ணீர்விட்டிருக்கிறார் தனம்மாள். திருக்கோடிக்காவல் கிருஷ்ணையருக்கும் தனம்மாளுக்கும் இருந்த பரஸ்பர மதிப்பும் அன்பும் சொல்லிமுடியாது. ஓர் இரவு சகானா பதத்தில் "அலிகேவாரலு" என்ற இடத்தில் பல்லவியை எடுத்து பிடியில் மூன்று மணி நேரம் வாசித்தார் ஐயர். பிறகு அம்மாள், இதே இடத்தை மணிக்கணக்காக வீணையில் வாசித்தார். சங்கீத பரவசத்தில் இரவு முழுதும் கழிந்தது தெரியவில்லையாம். பிரசித்திபெற்ற ஜாவளிகள் இயற்றிய தர்மபுரி சுப்பராய ஐயர், தனம்மாள் வீட்டிலேயே பல வருஷங்கள் இருந்தார். அவரது அழகான ஜாவளிகள் செய்யப்பட்டு, அவ்வப்போது 'தனத்தின் வீணையில்' போட்ட பிறகுதான் வெளிவரும். இவர் பரசு ராகத்தில் "ஸ்மரஸுந்தராங்கு" என்ற ஜாவளியையும், "சகிப்ராண" என்னும் செஞ்சுருட்டி ஜாவளியையும் தனம்மாளுக்காகவே இயற்றினார். வடதேசத்து மகா வித்துவானை அப்துல் கரீம்கான் இவரிடம் கொண்டிருந்த பக்தியை அளவிட்டுச் சொல்லமுடியாது. நாதோபாசனையின் அபேதமான இயல்பு இவர்கள் நட்பில் நன்கு விளங்கும்.

தற்காலத்தில் கர்நாடக சங்கீதத்தில் புகழ் பெற்றுள்ள டைகர் வரதாசாரியாரும் தனம்மாளும் மணிக் கணக்



காகப் பரஸ்பரம் பாடிச் சங்கீதத்தை அனுபவித்ததைச் சொல்லாமல் இருக்க இயலாது. மூன்று மணி நேரம் தனம்மாள் விசித்திரமாக தானம், ராகம் முதலியன வாசித்து, அபூர்வமான குறவஞ்சி முதலியவைகளையும் பாடினார். பிறகு டைகர், தோடி, கரகரப்பிரியா முதலியன பாடினார். டைகரை, கோயமுத்தூர் ராகவையர் பாணியாக இருக்கிறதென்று தனம்மாள் பாராட்டினார். "ராகம் பாடும் வழிக்கு லட்சணங்கள் ராகவர்த்தனி, விதாரி என்றெல்லாம் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும். ஆனால், தனம்மாள் ராகம் வாசித்துப் பாடும் போது, சர்வ லட்சணங்களும் பூர்ணமாக நிறைந்திருக்க முடியும் என்றல்லவா தெரிகிறது!" என்று டைகரும் தனம்மாளின் லக்ஷ்ய ஞானத்தில் புதைந்து கிடந்த லட்சணம், சம்பிரதாயம் இவைகளைப் பார்த்து உருகினார்.

கர்நாடக சங்கீத சம்பத்தில் பெண்களுக்கும் ஆடவரோடு சம உரிமை உண்டு என்பதை நிலை நிறுத்தியது இவருக்குரிய பெரும் புகழ். பரோடா, மைசூர், திருவனந்தபுரம், விஜயநகரம் முதலிய சமஸ்தானங்களில் போய், உயர்ந்த தோடாக்களையும் சன்மானங்களையும் இவர் பெற்றிருக்கிறார்.

தனம்மாள் என்ன கவியா? சாகித்திய கர்த்தாவா? அழியாச் செல்வம் நமக்கு எதை வைத்துவிட்டுப் போயிருக்கிறார்? என்று கேட்கலாம். உலகத்தில் எல்லா விஷயங்களுக்கும், சிருஷ்டி, ஸ்திதி, லயம் என்று மூன்று பருவங்கள் உண்டு. கவிஞர் உண்டுபண்ணும் சக்தி உடையவர். இசையையும், சாகித்தியத்தையும் ஒன்றுபடுத்தி, அதில் பக்தியையும், பாவ, ராக, தாளத்தையும் கூட்டிப்

பரவசப்படுத்த வல்லமையுடைய ஓர் உயர்ந்த சிருஷ்டியாகச் செய்து விடுகிறார். ஆனால் கவிஞர் உண்டுபண்ணினார், மறைந்தார் என்றால், கலையின் ஆர்வம் தீர்ந்துவிடுமா? அதை அவர் செய்தபடி உலகத்திற்குக் காட்ட வேண்டாமா? பாட்டைப் புத்தகத்திலிருந்து படித்தால் சுவைக்க முடியுமா? அதைத் தக்க அமைப்புக்களோடு, கவி இதயம் கெடாமல், நாதத்தில் அழகுபடுத்திக்காட்டினாலல்லவா நாம் அதை ரசிக்கமுடியும்? தட்டான் அழகான சிமிக்கிகளை நவரத்னங்களும் இழைத்துச் செய்துவிடுகிறான். அது அவன் கையில் தன் முழு அழகையும் காட்டுகிறதா? அல்லது அவன் செய்து பீரோவில் வைத்தால்மட்டும் சோபிக்குமா? அதைக் காதில் போட்டுக்கொண்டு, கன்னங்களில் குலுங்கி விளையாடும்படிப் பெண்கள் அணிந்தால் தானே அச்சிமிக்கி தக்கவாறு பிரகாசிக்கும்? இதுதான் ஸ்திதி என்ற இரண்டாவது பருவம். இந்தக் கலையில் தான் தனம்மாள் நிகரற்றவராக இருந்தார்.

சங்கீத மும்மணிகளின் கீர்த்தனங்களில், தியாகையரது பக்தி வெள்ளத்தில் மூழ்கி எழுந்து, தீக்ஷிதரது விளம்ப சௌக்கியத்தில் விளையாடுவார். சாமா சாஸ்திரி சுப்பராய சாஸ்திரி கிருதிகள் எப்படி இவரிடம் இவ்வளவு அழகாக இருக்கின்றன என்று யோசித்தால், சுப்பராய சாஸ்திரியாரது நேர் சிஷ்யை தஞ்சாவூர் காமாட்சி; இவர் நாட்டியக் கலையில் அதி நிபுணர். தஞ்சாவூர் காமாட்சியின் பேத்தியும் சிஷ்யையுமே வீணை தனம்மாள். இவரிடம் எல்லாவற்றிற்கும் சிகரம் போல் அமைந்தவை க்ஷேத்ரக்ஞ பதங்களே; அவை இவரிடமே இருப்பிடமாக இருந்தன.

இப்படியாக ஓர் உயர்ந்த அழகுடன் அறுபது வருஷகாலம் இவர் வீணாகானம் செய்து, புகழ்பெற்ற கவிகளின் உள்



ளத்தை நமக்குத் திறந்துகாட்டி, நம்மை இன்புறச் செய்து வந்தார்.

சாதாரணமாகப் பழையபாட்டு, புதியபாட்டு என்றெல்லாம் சொல்லக் கேட்கிறோம். ஆனால், எவ்வளவு பழைய கீர்த்தனையை இவர் வாசித்தாலும் அது மெருகு அழியாத புதிய பாட்டாகத்தானிருக்கும். இந்தத் தொண்டு கிழவியினுடைய சுருங்கிய கையின் மெல்லிய விரல்களிலிருந்து கிளம்பும் கம்பீர நாதத்தைக் கேட்கும்போது,—கலைக்குப்புதியது பழையது கிடையாது, அது என்றும் அழகு, ருசி, வன்மை வாய்ந்தது என்னும் உண்மையை நாம் உணர்வோம். இது தான் தனம்மாளின் மகிமை.